Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
**Case No CC.NO.264/2025, Cr.No.83/2025, Kandili PS**
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.7, Page.No.

| | |
|---|---|
| பெயர் | சக்திகணேசன் |
| வயது | 40 |
| தந்தை/கணவர் பெயர் | ஆறுமுகம் |
| தொழில் | உதவி மருத்துவ அலுவலர் |
| கிராமம் | அடியத்தூர் |
| மாவட்டம் | திருப்பத்தூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 30th day of October 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை (எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை)</u>**

நான் தற்போது திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.04.2025 அன்று இரவு 09.10 மணியளவில் நான் பணியிலிருந்தபோது, இளவம்பட்டி ஊரைச் சார்ந்த திருப்பதி த/பெ. லிங்கண்ணன் என்பவரை விஜயா என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். 02.04.2025 அன்று இரவு 07.30 மணியளவில் தன்னை தன் வீட்டினருகில் 2 ஆண் நபர்கள் தன்னை அறிவாள் கொண்டு தாக்கியதாக விசாரித்த போது கூறினார். அவரை பரிசோதனை செய்ததில்,

1. இடது கையில் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது விரல்களில் ஆழமான வெட்டுக்காயமும் தசை நார் துண்டிக்கபட்டும் இருந்தது.
2. இடது புற மார்பில் 5*0.5*0.5 என்ற அளவில் வெட்டுக்காயமும் இருந்தது.
3. இரண்டு கால் முட்டிகளிலும் 2*0.5*0.5 என்ற அளவில் வெட்டுக்காயமும் இருந்தது.

அவருக்கு முதலுதவி முடித்து பின்னர் அவரை மேற்சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவருக்கு தருமபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சையின் அடிப்படையில் கொடுத்த

சான்றிதழின் அடிப்படையில் நான் அவருக்கு சிகிச்சை அளித்ததின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என்று காயச்சான்று வழங்கினேன். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பு வழங்கப்பட்டது குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR

Judicial Magistrate No.II,
Tirupathur.